1984 மார்ச் 9]

(இ) ஆம் எனில், அவ்வாறு எவ்வளவு பேர் நியமிக்கப்பட உள்ளனர்?

விடை—

(அ) மற்றும் (இ) அரசு நிதிநிலை இடந்தரும் அளவுக்கு கூடுதல் ஆசிரியர் பதவிகளை அரசு ஏற்படுத்தி வருகிறது.

Payment of T.A. and D.A. to Teachers.

60 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to State:

(*a*) whether it is a fact that the Travelling Allowance and Daily Allowance due to the Teachers for the work done, relating to the S.S.L.C. and Higher Secondary Examinations held in March 1982 have not yet been disbursed throughout the State;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the action taken by the Government to avoid further delay?

விடை—

(அ), (இ) மற்றும் (உ) இடைநிலைக் கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வி மார்ச்/ஏப்ரல் 1982 பொதுத் தேர்வுகளில் மேற்பார்வைப் பணியாளர்களாக பணியாற்றிய ஆசிரியர்களுக்கு பயணப்படி மற்றும் நாட்படி ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக் குழுவில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களை நியமித்தல் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு புலவர் புலமைப்பித்தன் அவர்களின் பதவிக் காலம் மேலவையில் முடிவடைந்ததால், அலுவல் ஆய்வுக் குழுவில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு மாண்புமிகு திரு. ஜி. சுவாமிநாதன், துணைத் தலைவர் அவர்களை உறுப்பினராக நியமிக்கிறேன்.